بسم الله الرحمن الرحيم

**FRIDAY SERMON / வெள்ளிக்கிழமை குத்து.:.பா 22/01/2016**

**(11 RABI'UL AAKHIR 1437 HIJRI)**

# "A LEADER FROM AMONG THE COMMUNITY OF MUHAMMAD" (PBUH)

# "முஹமது (ஸல்) வின் சமுதாயத்திலிருந்து ஒரு தலைவர்"



**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

உலக மக்களுக்கு சலாம் கூறியப்பிறகு தஷஹ்ஹுதும் தஅவசும் அல்.:.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்.ரத் கலீ.:. பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு உரையாற்றினார்.

**"இதுதான் உங்கள் பிதாவாகிய இப்றாஹிமுடைய மார்க்கமாகும் அவன் தாம் இதற்கு முன்னர் உங்களுக்கு முஸ்லீம்கள் என பெயரிட்டான்"** (22-79)

ஏய் முஸ்லீம்களே! நினைவு கொள்ளுங்கள் நாம் இப்றாஹீம் நபி (அலை) மின் வாக்களிக்கப்பட்ட வாரிசுகள் ஆவோம். சமுதாயங்களில் வைத்து மிக சிறந்த சமுதாயமாக அல்லாஹ் நம்மை தேர்ந்தெடுக்கின்றான். இறுதிநாள் வரையிலும் அரசப்பதவிகள் போன்ற தற்காலிகமான அருள்களால் வலிமையடைவதற்கான வாய்ப்பும், நபியத்துவத்தரத்திலான ஆன்மீக அருள்களால் வளர்ச்சியடைவதற்கான வாய்ப்பும் அல்லாஹ் நமக்கு

வழங்கியிருக்கின்றான். காரணம் நாம் இப்றாஹீம் நபி (அலை) மின் குடும்ப பரம்பரையில்பட்டவர்கள் ஆவோம்.

இப்ராஹீம் நபி (அலை) மின் வாரிசு பரம்பரையில் பட்ட இஸ்ரவேல் (யாக்கோபு நபியின் தலைமுறைகளில்) அவர்கள் நல்லவர்களாயிருந்த காலம் வரையில் அல்லாஹ் அவனது வாக்குறதியினை கடைபிடித்து வந்தான். அவர்களுக்கு அரசபதவியும் நபித்துவவும் வழங்கிவந்தான். ஆனால் அவர்கள் தீயகுணமுடையவர்களாக மாறியபிறகு அல்லாஹ் அவனது ஒளியினை, அவனது அருள்களை இஸ்மாயில் நபி (அலை) மின் குடும்ப பரம்பரையின்பால் மாற்றிக்கொண்டான். அத்தோடு, பிரபஞ்சத்திற்கு கருணையாகவும் அனைத்து மக்களுக்கும் அருளாகவும் ஒரு இறையடையாளம் என்ற நிலையில் எவரொருவரின் வருகையைக் குறித்து வாக்களிக்கப்பட்டிருந்ததோ அது நிகழ்ந்தது. உலகம் எதிர்பார்த்திருந்த முழமைப்பெற்ற தூதர், காத்தமுத்தபியீனாகவும் இஸ்லாமதத்தின் நிறுவினராகவும் நமது பிரிய தூதர் முஹமது (ஸல்) அவர்கள் திரு குர்ஆன் என்ற பரிபூரணமான இறைவேதத்துடன் தோன்றினார்.

அனைத்து மக்களுக்கும் அருளாக அவதரித்ததினால், நபிமார்களின் வாசல் ஒருபொழுதும் அடைவதில்லை. தனது தோழனாகிய ஒரு இறைத்தூதரின் வருகைப்பற்றி தூய நபி (ஸல்) அவர்கள் கூறியது எதற்காக? என்பதைக்குறித்து எல்லா முஸ்லீம்களும் அறிந்திருக்க வேண்டியது மிக முக்கியமான ஒரு விஷயமாகும். **“இமாமுக்கும் மின்கும்”** உங்களிலிருந்துள்ள இமாம்! இந்த முல்லாக்களுக்கு இவ்விஷயத்தை எப்படி மறுக்கயியலும்? நுபூவத் இஸ்லாமில் அடைந்து விட்டது என ஏன் அவர்கள் கூறுகின்றார்கள்! இவ்வகை தவறான வாதங்களால் அவர்கள் முஸ்லீம்களை யூதர்களின் பட்டிகையின்பால் தள்ளிவிடுகின்றார்கள். யூதர்களோ அவர்கள் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகி நுபூவத் எனும் மாபெரும் அருளை இழக்கின்றவர்களாக பரிணமித்தனர். ஆனால் முஸ்லீம்களோ அவர்கள் ஹஸ்ரத் முஹமது (ஸல்) வில் இருந்து பிரதிபலன் பெற்றுக்கொள்ளும் சங்கமாக நிலைகொள்ளுகின்றனர். கோபத்திற்கு ஆளாகியோர்களின் வழியிலுமாகவில்லை. நெறிதவறியோர்களின் மார்க்கத்திலுமாகவில்லை. மாறாக அவர்களிலிருந்தே இறைத்தூதர்கள் தோன்றுவதை முஸ்லீம்கள் காண்கின்றனர். அந்த அருளை தக்கவைத்துக்கொள்வதற்காக அல்லாஹ் ஒரு பிரார்த்தனையைக் கற்பித்திருக்கின்றான். சூரா அல்.ஃபாத்திஹாவில் நமக்கு அதைக் காணமுடியும். திருக்குர் ஆனில் முதல் அதிகாரத்தை கவனமாக நீங்கள் படித்துக் கொள்ளுங்கள். அல்லாஹ் இரண்டு பிரிவினர்களைக் குறித்து அதில் கூறுகின்றான். ஒன்று இறையருள்களை இழந்த யூதர்கள், மற்றொன்று இறையருள்களை இழந்த கிர்ஸ்தவர்கள். இவ் வசனம் நமக்கு வழங்குகின்ற படிப்பினை அவர்களைப்போன்று முஸ்லீம்களும் இறைகோபத்திற்கு ஆளாகவும் வழிதவறவும் கூடாது என்றாகும். மட்டுமின்றி இறையருள்கள் கிடைக்கும் பாதை வழியாக பயணம் மேற்கொள்வதற்கும் அவன் நம்மை கற்பிக்கின்றான். அல்லாஹ் முஸ்லீம்களிடம் இவ்வாறு பிரார்த்தனை செய்ய கூறுகின்றான்.

**“நீ எங்களை நேர் வழியில் நடத்தவாயாக! நீ எவர்களுக்கு அருள்புரிந்தாயோ அவ்வழி உன் கோபத்திற்கு ஆளானோர் வழியுமல்ல; நெறிதவறியோர் வழியுமல்ல”** (1:6-7)

இறைத்தூதர்களை தோற்றுவிக்கும் அல்லஹ்வின் நடவடிக்கையை அவன் முடித்துக்கொண்டானோ? அப்படியென்றால் பின்னர் எதற்காக அப்பதவியினை அடைவதற்கான பிரார்த்தனையை அவன் கற்பித்தான்? அல்லாஹ் வாக்குறுதி அளித்தது இப்றாஹீம் நபியிடமாகும். அன்னார் வழியாக இஸ்ரவேல் மக்களிடமும். ஆனால் அவர்கள் தீயகுணமுடையவர்களாகிய பிறகு, பதிலாக அவர்களை விட சிறந்தவர்கள் மீது அவனது அருளை மாற்றிக்கொண்டான். அதாவது இஸ்மாயில் பரம்பரையின்பால் அவனது அருள்களை இறக்கிக்கொண்டான். இறைவன் இப்றாஹீம் நபிக்கு அளித்த வாக்குறுதியினை தவிற்துக்கொண்டான் என எங்காவது எழுதப்பட்டிருப்பதாக காணயியலாது. அல்லது இப்றாஹீம் நபி (அ) மின் வாரிசுபரம்பரை முழுவதும் தீயகுணமுடையவர்களாக மாறிக்கொண்டார்கள் என்பதற்கும் சான்றில்லை. உண்மையில் இன்றய நாள்வரையிலும் அல்லாஹ் இப்ரறாஹீம் நபிக்கு அளித்த வாக்குறுதிக்கு முடிவு கட்டவில்லை என்பதை நாம் குறிப்பாக நினைவுகொள்ளவேண்டும். அல்லாஹ் அளித்துள்ள இந்த வாக்குறுதி இப்ராஹீம் நபி (அலை) மின் பரம்பரை நிலைநிற்கும் காலம்வரையில், அவர்கள் முழுவதும் தீயகுணமுடையவர்களாக மாறிக்கொள்ளாத காலம் வரையில் நுபூவத்தும் தொடரும். இப்றாஹீம் நபி (அலை) மின் வாரிசு பரம்பரை மிக பெரியதாகும். அது இறுதிநாள்வரையிலும் தொடர்ந்து வரும். யூதர்களிலும் கிறிஸ்தவர்களிலும் நிகழ்ந்தது போன்று இந்த பரம்பரையும் முழமையாகவும் தீய குணமுடையோர்களாகிவிட்டால் மட்டுமே நுபூவத்தின் வாசல் அடைந்துவிட காரணமாகுவது. ஆனால் அல்லாஹ் ஒரு பிரார்த்தனை சூரா.ஃ. அல் பாத்திஹாவில் கற்பித்தான். நீ எவர்களுக்கு அருள்புரிந்தாயோ அவர் வழியில்! அதாவது இப்ராஹீம் நபி (அலை) மின் பரம்பரையில் ஒரு பிரிவினர் எப்பொழுதும் நன்மையில் நிலைகொள்கின்றோர்களாகயிருப்பார்கள். இரண்டாவது ஒரு பிரிவினம் நுபூவத்தின் வாசல் முழமையாக அடைந்துவிட்டது என வாதம் செய்வோர்களாக இருப்பார்கள். அவர்களைப் பற்றி கூறினால் அவர்களும் தீயகுணமுடையோர்களாக மாறிக்கொண்டார்கள் என்பதே உண்மை.

ஆகவே ஜமாத்துச்சஹிஹீல் இஸ்லாமை சார்ந்த முஸ்லீம்கள் அவர்களின் நம்பிக்கையின் அடிப்படையில் இப்றாஹிம் நபி (அலை) மின் பரம்பரையை சார்தோர்கள் ஆவார்கள். ஆனால் இஸ்லாமின் பல்வேறு பிரிவினை சார்ந்த உலமாக்களை பொறுத்தவரையில் அவர்கள் எங்கிருக்கின்றார்கள்? அவர்கள் அவர்களின் கண்களை திறக்க வேண்டும். அவர்களின் நிலையைக் குறித்து அவர்கள் உணர வேண்டும். சூரா அல்.ஃ.பாத்திஹாவில் கற்பித்திருக்கின்ற பிரார்த்தனை தீர்க்கதரிசன முடையதாகும். அதைப்போன்று மற்றொன்று தூய தூதர் முஹமது (ஸல்) நமக்கு கற்பித்திருந்தார். **தாறூத் இப்றாஹீம்** என்ற பெயரிலான அப் பிரார்த்தனை இவ்வாறாகும்.

**“அல்லாஹ்வே! முஹமது நபி (ஸல்) விற்கும் அன்னாரின் குடும்பத்திற்கும் நீ அருள் புரிவாயாக! இப்றாஹீம் நபி (அலை) மிற்கும் அன்னாரின் குடும்பத்திற்கும நீ அருள் புரிந்தது போன்று! நிச்சயமாக நீ மகத்துவமுடையவனும் வணக்கத்திற்குரியவனம் ஆவாய். அல்லாஹ்வே! முஹமது நபி (ஸல்) மிற்கம் அன்னாரின் குடும்பத்திற்கும் இப்றாஹீம் நபி (அலை)**

**மிற்கும் அன்னாரின் குடும்பத்திற்கும் அருள்புரிந்தது போன்று அருள்புரிவாயாக நிச்சயமாக நீ மகத்துவமுடையவன் ஆவாய்"** (புகாரி)

இப்றாஹீம் நபி (அலை) மிற்கும் குடும்பத்திற்கும் வழங்கப்பட்டது எவ்வகையான அருள்களாகும்? பௌதீக நோக்கத்தில் அரச அதிகாரமாகயிருக்கவில்லையா? ஆன்மீக நோக்கத்தில் நுபூவத்தாகயிருக்கவில்லையா? ஆம். அதே அருள்களையாகும் முஹமது (ஸல்) வின் சமுதாயம் தாறூது வழியாக இறைவனிடம் நாம் கேட்கின்றது. அற்புதம் என கூறலாம் மௌலவிகள் ஒரு புறம் நூபூவத்தின் வாசலை கொட்டியடைக்கின்றார்கள். மறுபுறம் நுபூவுத்திற்காக பிரார்த்தனை செய்கின்றார்கள். இந்த மௌலவிகளுக்கு நிலை நிற்பில்லை. அவர்கள் மக்களை வாஞ்சிக்கின்றார்கள். தூய வசனங்களுடன் அல்லாஹ் அவனது தூதரை தேர்ந்தெடுக்கும் பொழுது, இறைவெளிப்பாடுகளுடன் அல்லாஹ் அவனது காலீ∴பத்துல்லாஹ்வை நியோகிக்கும் பொழுது அது அவர்களுடையதல்லை யென்று மௌலவிகள் கூறுகின்றனர். ஆனால் அல்லாஹ்வின் திட்டத்தை அழித்துக்கொள்வதற்கான ஆற்றல் பண்டிதற்களுக்கும் மக்களுக்கும் இல்லை. அல்லாஹ் அவன் நாடுகின்றவர்களுக்கு அரச அதிகாரம் வழங்குகின்றான். அவன் நாடுகின்றோர்களுக்கு நுபூவத்தும் வழங்குகின்றான்

**"அல்லாஹ் தனது தூதை எங்கு அமைக்க வேண்டுமென்பதை நன்கு அறிவான்"** (6-125)

சிந்திக்கவேண்டிய மற்றொரு விஷயம், பூமியில் ஆட்சியை பிடித்துக்கொள்ள முஸ்லீம்கள் முயர்ச்சிகள் மேற்க்கொண்டு வருகின்றனர். அது அவர்களுக்கு கிடைக்காமல் வரும்பொழுது, அவர்கள் வருத்தமுடையவர்களாக மாறிக் கொள்கின்றனர். ஆனால் இவ்வுலகின் ஆட்சியும் அதிகாரமும் தற்காலிகம் மட்டுமாகும். நமக்கு இது கிடைக்காமல் போனால்க் கூட அதொரு விஷயமல்ல. ஆனால் நமக்கு ஆன்மீக அருள்கள் கிடைக்காமலிருந்தால் நமது எதிர்காலம் அபாயத்திலாகும். காரணம் தவறுகள் நம்மை நாசத்தின்பாலும் தொடர்ந்து நகரத்தின்பாலும் இழுத்துச்செல்லும். அதனால் தவறுகளை சரிசெய்வதற்காக ஒரு இறைத் தூதர் வருகைத்தந்தால் மனிதர்கள் இவ்வுலகிலும் நாளை மறுவுலகிலும் வெற்றியடைவார்கள். இப்ராஹீம் நபி (அலை) மின் குடும்பத்தில் நபிமார்கள் தோன்றிக்கொண்டிருப்பார்கள் என்ற வாக்குறுதி அன்னாரின் பரம்பரையால் முழுவுலகும் அருளுக்குரியதாகும் என்றாகும். அதைப்போன்றே இறைவன் நமக்கு கற்பித்த அந்த பிரார்த்தனை வழியாக இறுதிநாள்வரையில் நபிமார்கள் தோன்றுவார்கள் என்பதும் உண்மையாகும். இவையெல்லாம் இறை திட்டங்கள் ஆகும். ஆகவே நல்லவர்களாகிய இறைவனின் படைப்பினங்கள் சாத்தானின் கரங்களிலிருந்து இரட்சிப்பை பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படியானால் அவர்கள் மறுமையில் இறையருள்களின் உரிமையாளர்களாக மாறிக்கொள்வார்கள். இவ்வுலகிலும் அவர்கள் அல்லாஹ்வின் திருப்திக்கு ஆளாகிக்கொள்வார்கள். இறுதிநாளுக்கு முன்னே இறைத்தண்டனை பூமியில் அனைத்து நாடுகளிலும் நிகழ்ந்துவிடும்.

**"இன்னும் கியாம நாளைக்கு முன்னே எந்த ஊரையும் நாம் அழிக்காமலோ அல்லது கடுமையான வேதனைக்கொண்டு வேதனை செய்யாமலோ இருப்பதில்லை. இது ஏட்டில் வரையபெற்றே இருக்கிறது"** (17-59)

இந்த வசனத்திலிருந்து இரண்டு விஷயங்கள் தெளிவாகின்றது. ஒன்று நேர்வழியினைப் பெற்றுக்கொண்டப்பிறகு வழித்தவறிக்கொள்தல் என்பது மனித குணத்தில் பட்டதாகும். இறுதிநாள் வரையிலும் அது தொடர்ந்து வரும் என்பதில் சந்தேகமில்லை. சாத்தான் அவனது உறுதிமொழிக்கு ஏற்றவார் மனிதர்களை நேர்வழியிலிருந்து தவறச்செய்ய எப்பொழுதும் முயற்சித்துக் கொண்டிருப்பான். ஒரு அளவுவரையில் அவன் அதில் வெற்றியடைவான். இரண்டாவது விஷயம் அல்லாஹ் மிக கடினமான தண்டனை இறக்கிக்கொள்வான். மனிதர்களை அவர்களின் மிகப்பெரிய தவறுகளிலிருந்து காப்பாற்றிக்கொள்வதற்கு. இந்த இரண்டு விஷயங்களும் இறுதிநாள்வரையிலும் தொடர்ந்துக்கொள்ளும். எவர்கள் எவ்வகையில் வாதம் செய்தாலும் சரி, திரு குர்ஆனுடையவும் தூய தூதருடையவும் வருகைக்கு பிறகு மக்கள் வழிதவறக்கூடாது என்று கூறுவது தவறாகும். அல்லாஹ் மன்னிக்க கூடியவன் ஆவான், அருளாளன் ஆவான். அவன் ஒருபொழுதும் அவனது படைப்பினங்களுடன் கடுமையாக பரிமாறிக்கொள்பவனல்ல. ஆனால் எந்த தண்டனைகளைக் குறித்து அவன் முன் அறிவிக்கை விடுத்திருக்கின்றானோ அது அனைத்து நகரங்களிலும் நிகழ்ந்துவிடவே செய்யும். அவன் மேலும் கூறுகின்றான்.

**"நம் தூதரை அனுப்பாத வரையில் எவரையும் நாம் வேதனை செய்வதில்லை"** (17-16)

கவனமில்லாதவர்களாக மனிதர்கள் நடந்துக்கொள்ளாமிலிருக்க தண்டனைக்கு முன்னாகவே இறைத்தூதர் தோன்றவேண்டும் என்பது கட்டாயமாகும். இந்த தண்டனை இறங்குவதற்கு முன்னாகவே இறைத்தூதரில் நம்பிகை கொண்டோர்களும் நேர்வழியினை பெற்றோர்களும் இரட்சிப்பினை அடைவார்கள். மற்றவர்கள் நாசத்திற்கு ஆளாகிவிடவும் செய்வார்கள். அவர்கள் சங்கபலத்தாலும் செல்வத்தாலும் ஆணவம் கொண்டோர்களும், இறைத் தூதரை எதிர்த்தோர்களும், தவறுகளிலிருந்து பாவமன்னிப்பினை தேடாதவர்களும், மேலும் மேலும் அபாயம் வாய்ந்த சூழ்நிலையை குறித்து முன் எச்சரிக்கை கிடைத்தபிறகும் கவனம் கொள்ளாதோர்களும் ஆவார்கள். நம் அனைவர்களையும் இறைவன் நேர்வழியில் நடத்தி கொள்வானாக! அல்லாஹ் அருள்புரிந்தவர்களின் வழியில்! ஆமீன்.

**Issued by**

**Jamaat Ul sahih Al Islam Dawa Department**

**Tamil Nadu, India (Regd. No. A/693)**

**Web. www. jamaat-ul-sahih-al-islam.com**

**Translated by**

**Azim Ahmad**

**E-mail: azimahmad070@gmail.com**

**Cell: 9789180817, 9947181650**